பண்டுக்குளி ... 

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY
மலர் 27 கார்த்திகை 14 ரபி அல் 16 இதழ் 292
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 29-11-1985

# மண்டூர், சம்பூரில் 45 பேர் பலி!

(கொழும்பு)

ஆயுதப்படையினரின் நடவடிக்கையினால் மண்டூரில் இருபத்துநான்குபேரும், மூதூர் தொகுதியில் உள்ள சம்பூரில் இருபத்தொருபேரும் நேற்று முன்தினம் பலியானார்கள்.

மண்டூரில் ஆயுதப்படையினர் தேடுதல் நடவடிக்கையின் போது சுமார் இருநூறு பேர் கைது செய்யப்பட்டபோதிலும் அதிகமானவர்கள் விடுவிக்கப்பட்டனர்;

நேற்று மண்டூரிலுள்ள இடங்களில் ஆற்றிலிருந்து பதினொன்பது ஆண், பெண் சடலங்களை பொதுமக்கள் மீட்டனர்.

தம்பலகாமத்தில் நேற்று தேடுதல் வேட்டை நடந்தது. சில வீடுகள் தீக்கிரையாகின...

## "தமிழ் இளைஞர்களை விடுதலை செய்க!"

(கொழும்பு)

"காலவரையறையின்றி தடுப்புக்காவலில் நீண்ட நாட்களாக தடுத்துவைக்கப்பட்டுள்ள சகல தமிழ் இளைஞர்களையும் உடனடியாக விடுதலை செய்யவேண்டும்"

கலவானை தொகுதி எம் பி திரு சரத் முத்தெட்டுவேகம பாராளுமன்றத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் நிதிஒதுக்கீடு குழுநிலை விவாதத்தில் பேசிய திரு சரத் முத்தெட்டுவேகம மேலும் கூறியதாவது: "வடக்கு கிழக்கில் தினமும், ஆண்கள், பெண்கள் இரு

(5ம் பக்கம் பார்க்க)

## நிதிஉதவி பெறவே யுத்தநிறுத்தம் அமுல்



(சென்னை)

"வெளிநாடுகளிலிருந்து சுமார் 48 கோடி டாலர் உதவியைப் பெற்றுக்கொள்வதற்கான தந்திரோபாயமாகவே இலங்கை அரசு போர் நிறுத்த உடன்பாட்டை ஏற்றுக் கொண்டுள்ளது" என்று சட்டத்தரணி எஸ். சந்திரகாசன்

(5ம் பக்கம் பார்க்க)

## "நாட்டின் ஒருபகுதி அவர்கள் கையில்"!

(கொழும்பு)

"இன்று இலங்கை முழுவதிலும் பிரிட்டிஷ் பாராளுமன்றக் குழுவினரை கிரிக்கெட் விளையாடக் கூட அழைத்துச் செல்லமுடியாததில்லை ஏற்பட்டுள்ளது. திருமலைவரை நாட்டின் ஒருபகுதி 'அவர்கள்' கட்டுப்பாட்டில் இருக்கிறது"

மத்துகம எம் பி திரு லலித் முதலிகே பாராளுமன்றத்தில் நேற்று பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: "நாட்டின் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வல்ல; அரசியல் தீர்வே வேண்டும் என்பதே எமது கட்சியின் கொள்கையாகும்.

(5ம் பக்கம் பார்க்க)

● பாராளுமன்றத்தில் லலித் வெளியிட்ட தகவல்

# உமாவுடன் தொடர்புள்ள குழு தெற்கில் கைது!

## அதிகமானவர்கள் சிங்களவர்

பாராளுமன்றத்திலிருந்து பி. ராஜரட்ணம்



"புளொட்" இயக்கமான உமாமகேஸ்வரனுடன் தொடர்புடைய கோஷ்டியினர் தெற்கில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்களில் பலர் பெரும்பாலானோர் சிங்களவர்கள். ஒருசில தமிழரும் அங்கம் வகிக்கின்றனர். இந்தக்கோஷ்டியினரைக் கண்டுபிடித்தது அதிஷ்டமானது என்று கூறவேண்டும். இல்லாவிடில் நாட்டில் இரத்தக்களரி ஏற்பட்டிருக்கும்."

இவ்வாறு அமைச்சர் லலித் அத்துலத்முதலி எச்சரித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்றுப்பேசிய தேசியபாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி மேற்கண்டவாறு கூறினார்;

பாதுகாப்பு அமைச்சு நிதிஒதுக்கீடு விவாதத்தின்போது அமைச்சர் லலித் அத்துலத்முதலி மேலும் கூறியதாவது: "இந்தக் கோஷ்டி இரு பிரிவுகளைக் கொண்டது: ஒன்று அரசியல் பிரிவு' மற்றது போராளிகள் அடங்கிய பிரிவு" இந்த இயக்கத்தின் அரசியல் பிரிவின் பெயர், சோஷலிச மக்கள் இயக்கம் எஸ் ஜே வி) போராளிகள் பிரிவின் பெயர் ஜனதா விமுக்தி பெரமுன நவ பெரமுன (ஜே வி பி எல் பி) என்பதாகும்;

'கண்டியில் திடீரெச் கைது செய்யப்பட்ட ஒருவர் கொடுத்த தகவல்களைக் கொண்டு

(5ம் பக்கம் பார்க்க)

## தனியார் வாகனத்தில் ஆயுதப்படையினர் ஏன் வருகிறார்கள்?"

(கொழும்பு)

"ஆயுதப்படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடும் போது இராணுவ வாகனங்களைப் பாவித்தால் தீவிரவாதிகள் அவர்களை எளிதில் அடையாளம் கண்டு; வீதிவெடிகளை வெடிக்கவைப்பார்கள் அதனைத் தடுக்கும் விதமாகவே ஆயுதப்படையினர் ரோந்து நடவடிக்கையின்போது தனியார் வாகனங்களைப் பயன்படுத்துகின்றனர்"

தேசியபாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி நேற்றுப் பாராளுமன்றத்தில் மேற்கண்டவாறு கூறினார்.

(5-ம் பக்கம் பார்க்க)

## சட்டத்தரணி மகன் கடத்தப்பட்டார்!

(சென்னை)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சட்டத்தரணி ஒருவரின் மகன், மதுரையில் கடத்தப்பட்டுள்ளார்:

சுரேஷ் என்றழைக்கப்படும் இவர் ஒரு மருத்துவக்கல்லூரி மூன்றாம் வருட மாணவர் ஆவார்.

நேற்றிரவு பிந்திக் கிடைத்த தகவல்களின்படி; இம்மாணவர் இரகசியப் பொலிஸாரினால் ஒரு 'ஜெட் ஜீ' விருந்தில் மீட்கப் பட்டதாகத் தெரிகிறது.

## பொலிஸ் சார்ஜன்ட் விடுவிக்கப்பட்டார்!

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாத நபர்களால் கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் யாழ் புலைவிரத நிலையத்தில் வைத்துக் கடத்திச் செல்லப்பட்ட கோப்பாயைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜன்ட் சதாசிவகுமார் நேற்று முன் தினம் புதன்கிழமை இரவு பத்து மணியளவில் விடுதலையாகி வீடு திரும்பினார்

(5-ம் பக்கம் பார்க்க)

## "தமிழ் அகதிகளை அரசாங்கம் புறக்கணித்துவருகிறது!"

### அகதிகள் மாநாட்டில் கண்டனம்

(ஐ சண்முகலிங்கம்)

தென் இலங்கையில் உள்ள அகதிகளுக்கு கூடுதலான உதவிகளை அரசாங்கம் வழங்குகிறது. தமிழ்ப் பகுதிகளில் எண்ணிக்கையில் கூடுதலாகவுள்ள அகதிகளுக்கு உதவிகளை குறைவாகவே அரசு செய்கிறது. இதுவரை அகதிகளின் ... வாழ்க்கை இன்று ... நடாத்தப்படுகின்றன ... அரசாங்கம் பிர... செய்கிறது"

இவ்வாறு யாழ். பிரஜைகள் குழுச் செயலாளர் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் இடம்பெயர்ந்த அகதிகள் மாநாட்டில் பேசும்போது குறிப்பிட்டார்

நேற்று யாழ் வை எம் சி ஏ மண்டபத்தில் யாழ்ப்பாணம் பூராவும் உள்ள இடம் பெயர்ந்து வந்திருக்கும் அகதிகளுக்கான மாநாடு நடாத்தப்பட்டது!

(5-ம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக் குழுவை கலைக்குமாறு முன்னணி கோரிக்கை!

(சென்னை)

போர் நிறுத்த உடன்பாட்டைக் கண்காணிப்பதற்கென இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள கண்காணிப்புக்குழு, முழு அளவில் பயனற்றதாக உள்ளது; இருப்பதாகவும், எனவே அதனை உடனடியாக கலைத்து விடுமாறும் ஈழ தேசிய விடுதலை முன்னணி வலியுறுத்தியுள்ளது.

முன்னணியின் முக்கிய பிரதிநிதி ஒருவர் நேற்று சென்னையில் திருவான்மியூர் மதியில்

(5 ம் பக்கம் பார்க்க)

ஸிம்பாப்வே மீது——————

# படையெடுக்கப்படுமென

# தென்னாபிரிக்கா எச்சரிக்கை!

பிரிட்டோரியா, நவ-28

ஸிம்பாப்வே மீது படையெடுக்கப்படும் என்று தென்னாபிரிக்க அரசு எச்சரித்துள்ளது. இரு தினங்களுக்கு முன்னர் தென்னாபிரிக்க ஸிம்பாப்வே எல்லையில் 'ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்' கெரில்லாக்களால் நடத்தப்பட்ட தாக்குதலொன்றையடுத்தே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தென்னாபிரிக்கக் கறுப்பர்களின் ஆ. தே. காங்கிரஸ் கெரில்லா இயக்கத்துக்கு ஸிம்பாப்வே புகலிடம் அளித்துள்ளதென்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு வடக்கில் மீது கண்ணிவெடித் தாக்குதல் நடைபெற்றது; இது ஸிம்பாப்வே எல்லையில் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதல் ஸிம்பாப்வே தென்னாபிரிக்கத் அருப்புகள் இதில் ஆறு வீரர்கள் காய பின் இருந்து வந்தே ஆ. தே. காங்கிரஸ் கெரில்லாக்கள் மேற்கொண்டனர் என்று தென்னாபிரிக்க வெளியுறவு அமைச்சர் திரு. பிக்போத்தா தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஆ. தே. காங்கிரஸின் கெரில்லா நடவடிக்கைகளுக்கு ஸிம்பாப்வேயே உதவியளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதுபோன்ற தாக்குதல்கள் தொடருமானால் ஸிம்பாப்வே மீது தென்னாபிரிக்கா படையெடுக்குமென்று அவர் கடும் எச்சரிக்கை விடுத்தார்.

இரு தினங்களுக்கு முன்னர் நான்கு கண்ணிவெடித் தாக்கு

(7-ம் பக்கம் பார்க்க)

"அப்பாவிப் பயணிகளை——————

# ஒரு எகிப்திய வேட்டுக்கூட தாக்கவில்லை" —முபாரக் கூறுகிறார்

செய்ரோ, நவ-28

"மோல்ட்டாவில் இடம் பெற்ற எகிப்திய விமானக் கடத்தல் முறியடிப்பின்போது ஒரு எகிப்திய துப்பாக்கி வேட்டுக்கூட அப்பாவிப் பயணிகளைக் கொல்லவில்லை" என்று எகிப்திய அதிபர் திரு. ஹொஸ்னி முபாரக் தெரிவித்துள்ளார்.

மோல்ட்டாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை எகிப்திய அதிரடிப்படையினர் எகிப்திய விமானக் கடத்தலை முறியடித்தனர். அப்போதே அவ்விமானத்திலிருந்த 59 பயணிகள் கொல்லப்பட்டனர்.

இந்த அப்பாவிப் பயணிகளின் மரணத்துக்கு எந்த வகையிலும் எகிப்து பொறுப்பில்லை என்று திரு முபாரக் தெரிவித்தார்.

உலகச் செய்திகள்

இவ்விமானக் கடத்தல் சம்பவத்தின் பின்னர் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு முபாரக் மேலும் கூறியதாவது:-

"ஏழு வேட்டுக்கள் மட்டுமே எகிப்திய அதிரடிப் படையினர் விமானத்தினுள் புகுந்ததும் பிரயோகித்தனர். இந்த ஏழு வேட்டுக்களில் நான்கு குறிதவறாது கடத்தல்காரர்கள் நால்வரைப் பலியெடுத்தன. ஏனைய மூன்று வேட்டுக்களும் விமானத்தினுள் சிதறிச்சென்றன; பயணிகள் மீது அவை படவில்லை.

ஆனால் கடத்தல்காரர்கள் வெடிக்கவைத்த குண்டுகளினாலேயே அப்பயணிகள் கொல்லப்பட்டனர்."

இதனை நிரூபிக்கத் தம்மிடம் போதியளவு ஆதாரங்கள் உண்டெனவும் அவர் குறிப்பிட்டார். (இ)

# 'அந்தாட்டிக்'டிக்கு இரு இந்தியபெண் விஞ்ஞானிகள்!

புதுடில்லி, நவ-28

அந்தாட்டிக் தென் துருவத்துக்கு இந்திய ஆராய்ச்சிக் குழுவொன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (1ம் திகதி) பயணமாகின்றது.

இக்குழுவில் 87 ஆராய்ச்சியாளர்கள் இடம்பெறுகின்றனர். திரு. கே. கே. கௌல் என்ற இந்திய புவியியல் ஆராய்ச்சியாளர் இக்குழுவுக்குத் தலைமை தாங்குகிறார்.

இத்தடவைக் குழுவில் இவ்வைந்தாவது அந்தாட்டிக் பயணத்தில் இரு இந்தியப் பெண் விஞ்ஞானிகளும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

அந்தாட்டிக்கிலுள்ள 'தட்சணகங்கோத்ரி' என்ற இந்திய ஆராய்ச்சித் தளத்தில் இக்குழு ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும்.

இதேவேளை இந்திய அந்தாட்டிக் ஆராய்ச்சியின் தகவல்கள் ஏனைய நாடுகளுடன் பகிர்ந்து கொள்ளப்படுமென்று ஐ. நா. சிறப்புப் பணிக் கூட்டத்தில் இந்தியாவுக்கான பிரதிநிதி நேற்றுத் தெரிவித்தார். (இ)

Lipton

எச்சரிக்கை!

லிப்டன் லாவோஜி

போலி லாவோஜி பக்கெட்டுகள் விற்பனைக்கு விடப்பட்டுள்ளதாக எமது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

1979 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க வர்த்தக அடையாள சட்டத்தின் பிரகாரம், பதிவுசெய்யப்பட்ட லாவோஜி வர்த்தக அடையாளத்தை மீறும் தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள் அல்லது பொருட்களை விற்பனை செய்வோர்மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ள முடியும். எனவே போலி லாவோஜிகளை தயாரிப்போர் அல்லது விற்பனை செய்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அசல் லாவோஜி தேயிலையை எமது கிளைகளில் அல்லது எமது மொத்த வியாபாரிகள் அல்லது சில்லறை விற்பனையாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.




லிப்டன் சிலோன் லிமிட்டெட்,
த. பெ. எண் 86,
கொழும்பு.

லிப்டன் லாவோஜி
அதி சிறந்த தேயிலைத் தூள்.

## கடைசி நேர வரி விளம்பரம்

### தவறிவிட்டது

இல: 602442233V இராஜேஸ்வரி மகேந்திரன் வேலணை மேற்கு, வேலணை என்பவருடைய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (2029)

இ. சண்முகநாதன் 324, அரசடி றோட், நல்லூர் என்பவருடைய இல. 52252970V அடையாள அட்டையும், D. L: 394068 இலக்க சாரதி அனுமதிப்பத்திரமும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். (2031)

இல. 270570941 நீக்கலஸ் ஆசீர்வாதம் என்பவருடைய அடையாள அட்டையுடன் மற்றும் சில தஸ்தாவேஜுகள் அடங்கிய ரெஜின்பை அச்சுவேலி குடாநாட்டிலிருந்து யாழ்ப்பாணம் வரப்பட்ட இ. போ. ச. பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். நீ. ஆசீர்வாதம் உடுப்பிட்டி கிழக்கு, கரவெட்டி (2019)

### விற்பனைக்கு

வீடு வளவு உட்பட இரண்டு பரப்பு காணி மின்சார வசதியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்; ஊ. கனகதேவன்' சுதுமலை வடக்கு, மானிப்பாய். (2023)


## தமிழ் அகதிகளை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மகளிர் அவைத்தலைவி செல்வி ரூ மேகலா தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் பிரஜைகள் குழுச் செயலாளர் தொடர்ந்து பேசுகையில் “இலங்கை அரசியல் சட்டத்தில் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. புத்தபகவானின் போதனைகளான கொல்லாமை போன்றவற்றை அரசு கடைப்பிடிப்பதாகப் பேசிக் கொள்கிறது. ஆனால் நாட்டில் நடப்பது என்ன? பிணங்களைத்தான் கண்டபடி காணமுடிகிறது. புத்தபகவானின் பிணத்தைப் பார்த்த பின்பே ஞானம் பெறும் வழியைத்தேடினார். இன்றைய நிலைமை தமிழ் மக்களுக்குத்தொடருமானால் சர்வதேச ஸ்தாபனங்களை, செஞ்சிலுவைச் சங்கம் என்பவற்றின் உதவியை நாடவேண்டி வரும்.

கண்காணிப்புக் குழு இன்று எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாமலிருக்கிறது. பிரஜைகள் குழு வருங்காலத்தில் ஒரு வித்தியாசமான நிலைக்குத் தள்ளப்படுவதுடன் அதுதன் கடமைகளை முடித்துக்கொண்டதும் கலைக்கப்பட்டுவிடும். தமிழ் மக்களின், அகதி மக்களின் பிரச்சினைகளைச் சர்வதேசரீதியில் பிரசாரப்படுத்துவதில் பிரஜைகள்குழு இறங்கியுள்ளது என்றார்.

நேற்றுக்காலை 10 மணிக்கு ஆரம்பமான இம்மாநாட்டுக்கு யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து ஐந்நூறுக்கு மேற்பட்ட அகதி மக்கள் கலந்துகொண்டனர். ஒவ்வொரு பகுதிகளிலிருந்தும் வந்தவர்கள் தமது கருத்துக்களை இங்கு தெரிவித்தனர். இவ்வாறு நாற்பதுக்குமேற்பட்டவர்கள் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

பெரும்பாலான இடம்பெயர்ந்த மக்கள் தாம் வாழ்ந்த பூமிக்குச் செல்ல விருப்பம் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்டவர்கள் தம் கண்களால் கண்ட பலசோகக் கதைகளை எடுத்துக் கூறினார்கள். இவ்வாறு கருத்துத் தெரிவித்தவர்களில் இரு இந்துமதக் குருமார்களும் அடங்குவர்.

கந்தளாய் பிள்ளையார் கோவில் குருக்கள் நித்தியானந்தன், தனது பூணூல் துப்பாக்கியால் கொளுவி அறுக்கப்பட்டதாகவும், கோவிலின் அருகிலிருந்த வீட்டுப்பெண் பிள்ளைகள், தாய், சகோதரர் கள் மிகக்கேவலமான கொடூரமான முறையில் பழிதீர்க்கப்பட்டு இறுதியில் பிணமாகக் காணப்பட்டதாகக் கூறினார். ஒட்டமாவடி பிள்ளையார் கோவில் பிரம்மஸ்ரீ ஜெகநாதக் குருக்கள் தம் கண்முன்னால் நடந்தவற்றை விபரமாகக் கூறமுடியாதென்றும், தான் ஒரு பிராமணனாக இருந்தும் அதற்குரிய ஆசாரங்களை எல்லாம் விட்டு உயிர் தப்பியாழ்ப்பாணம் வந்ததாகவும் கூறினார்.

திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த பல ஊர்களையும் குறிப்பிட்டு மக்கள் தாம் கண்டவற்றையும் அனுபவங்களையும் சம்பவங்களையும் கண்ணீர் விட்டுக் கூறினார்கள்.

மாநாடுபகல் ஒன்றரை மணிவரை நடைபெற்றது. தமிழ் மகளிர் அவை பேச்சாளர் திரு இரா முருகையா, திரு கியூட் டன், செயலாளர் செல்வி ஞா மஞ்சுளா ஆகியோர் இடம் பெயர்ந்த மக்களின் பலதரப்பட்ட அபிப்பிராயங்களுக்கும் பதில் கூறினர்.

நேற்று அகதி மக்களிடம் பெற்றுக்கொண்ட அபிப்பிராயங்கள் யாவும் இன்று இரண்டாம் தடவை நடைபெறும் மாநாட்டில் முன்வைக்கப்படும்.

இன்றைய மாநாட்டில் யாழ் அரசாங்க அதிபர், ஏனைய அரசாங்க நிர்வாகிகள், சமூக சேவை ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள், உதவிசெய்யும் நிறுவனங்களின் உறுப்பினர்கள் என பலதரப்பட்ட பிரதிநிதிகளும் கலந்துகொள்கிறார்கள். (ஐ)

## தமிழ் இளைஞர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் பாதுகாப்பு படையினரால் கைது செய்யப்பட்டு வருகின்றனர்; வடக்கு கிழக்கைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் மட்டுமல்ல தெற்குப் பகுதியிலுள்ள இடதுசாரிகள் பலர் தற்போது கைதுசெய்யப்பட்டு எவ்வித விசாரணையுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

“வடபகுதி தீவிரவாதிகளையும், தென்பகுதி அரசியல்வாதிகள் சிலரையும் சில அமைப்புகளையும் மார்க்ஸிஸ தீவிரவாதிகள் இயக்கம் என்று லங்கா புவத் பிரசாரம் செய்துவருகிறது உலக நாடுகளில் இதுதப்பான அபிப்பிராயத்தை ஏற்படுத்தும். (ப-உ)

## நிதிஉதவி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசுமீது குற்றம் சுமத்தியுள்ளார்.

“இனப்படுகொலையிலிருந்து ஈழத்தமிழ்மக்களை காப்பதற்கான இயக்கத்தின் தலைவரான சட்டத்தரணி எஸ் சந்திரகாசன் நேற்று சென்னையில் நிருபர்கள் மத்தியில் பேசும்போதே இதனைத் தெரிவித்தார்.

“இந்த நாடுகள் உதவி அளிப்பதாக உறுதி அளித்தவுடன் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இலங்கை அரசு அக்கறை காட்ட மறுத்துவிட்டது. இலங்கைத் தமிழ்த்தலைவர்கள் ஏற்கனவே நிராகரித்த யோசனைகளை இலங்கை அரசு மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகிறது இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற வேளையிலேயே தமிழர் பிரதேசங்களை, குறிப்பாக திருகோணமலைக்கு அருகிலுள்ள இடங்களை இலங்கை அரசு வேண்டுமென்றே அழித்து போர் நிறுத்த உடன்பாட்டை மீறிவிட்டது” என்றும் அவர் குறிப்பிட்டார். (ரா)

## மானிப்பாயில் மரணதண்டனை

(யாழ்ப்பாணம்)

சமூகவிரோத செயல்களில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் 'தமிழீழ விடுதலைப்புலிகள்' இயக்கத்தினரால் மானிப்பாயில் வைத்து நேற்று சுட்டுக்கொல்லப்பட்டார்.

மானிப்பாயைச் சேர்ந்த விசுவரத்தினம் என்பவருக்கே இத்தண்டனை வழங்கப்பட்டது. இவருக்கு சுமார் 55 வயதிருக்கும்.

“எமது இயக்கத்தின் முகாமையும், தோழர்களையும் காட்டிக்கொடுத்தமைக்காக இவருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டது” என்று உரிமை கோரப்பட்ட துண்டுப்பிரசுரமும் அங்கு காணப்பட்டது. உறவினர்கள் நேற்று மாலை அவரின் சடலத்தை எடுத்துச் சென்றனர். (மா)

## உமாவுடன்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இயக்கம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த நபர் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் கொள்ளையடிக்கச் சென்றபோது கைது செய்யப்பட்டார். அவரிடம் ஒரு 'றிவோல்வர்' கைப்பற்றப்பட்டது: அந்த 'றிவோல்வர்' திசநாயக்க என்பவரின் நினைவாக 'புளொட்' இயக்கத்தினர் தமக்கு அனுப்பியதாக கொள்ளை சம்பவங்கள் நடத்தப்பட்டதாகும் இவர் கைது செய்யப்பட்டதையடுத்து மேலும் பலர் கைது செய்யப்பட்டனர். மற்றும் பல ஆவணங்களும் கைப்பற்றப்பட்டன.

“இவர்கள் தெற்கில் நகரப் பகுதிகளில் மூன்றுபேர் அடங்கிய 'செல்களை' அமைத்திருந்தனர். இக்குழுவினர் நாட்டில் தனிப்பட்டவர்களைத் தாக்கி குழப்பம் ஏற்படுத்தத் திட்டமிட்டிருந்தனர். இதன் மூலம் வடபகுதியில் உள்ள இராணுவத்தை இங்கு வரவழைக்கும் நிலைமையை உருவாக்கத் திட்டமிட்டிருந்தார்கள்.

“1984ம் ஆண்டு இறுதிப் பகுதியில் ஆரம்பமான இந்த இயக்கம் 1985ம் ஆண்டுமுதல் உக்கிரமாக, சுறுசுறுப்பாக இயங்க ஆரம்பித்துள்ளது தற்போது தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது. தப்பியோட முயன்ற 24 தீவிரவாதிகள் ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ப-உ)

## கண்காணிப்புக்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பேசுகையில் இத்தகவலைத் தெரிவித்தார்.

இதுகுறித்து இன்னும் ஓரிரு தினங்களில் ஈழ தேசிய விடுதலை முன்னணி இந்திய மத்திய அரசுடன் விரிவாக விவாதிக்கவுள்ளதாகவும் அந்தப் பிரதிநிதி அங்கு கூறினார்.

இந்தக் கண்காணிப்பு குழுவினரின் நடவடிக்கைகள் யாவும் மேற்பார்வையின் கீழ் நடைபெறுவதாக கூறிய அந்தப் பிரதிநிதி, இந்தக்குழுவுடன் பொதுமக்கள் தொடர்பு கொள்ள முடியாதுள்ளது என்றும் தெரிவித்தார். (ரா)

## நாட்டின் ஒரு..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் தீர்வுகாணவேண்டுமென்றால் நாட்டின் ஆயுதப் படையினர் பலமாக இருக்க வேண்டும் என்றார். திருகோணமலையை இராணுவ வலயம் ஒன்றை ஏற்படுத்தவேண்டும். அதன் ஒரு திட்டத்தின் அடிப்படையில் வடக்குக்கு விஸ்தரிக்கவேண்டும் தீவிரவாதிகள் யாவரையும், வடக்குக்கு கொண்டுபோனால், அரசியல் தீர்வு சாத்தியமாகும். (ப-உ)

## செய்திப்பலகை தகவல்

(யாழ்ப்பாணம்)

'ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி' [ஈ பி ஆர் எல் எவ்] ஈழம் செய்திப்பலகை சுவரொட்டியில் பின்வரும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

மண்டூரில் கடந்த சென்ற 30 தமிழர்கள் ஆயுதப்படையினரால் கட்டுக்கொலை, தர்மபுரத்தில் மூன்று 'மக்கள் கடை' ஆயுதப்படையினரால் தீக்கிரையானது. தோழர் றேகன் படுகொலை தொடர்பாக “விடுதலைக்காளிக்கு” எனும் தலைப்பில் துண்டுப்பிரசுரம், யாழ்குடாநாடெங்கும் விநியோகிக்கப்பட்டது.

கன்னாகச் சம்பவம்.

சுன்னாகத்தில் விதவை ஒழுக்கை மீறிய வைவிபசார உளவாளி எனக்கருதப்பட்டு விசாரிக்கப்பட்ட மனநோயாளி குமரேசன் மரணமடைந்தார். குற்றவாளிகளுக்கு தீர்ப்பு வழங்கும் பொறுப்பு மக்களின் கைகளில் ஒப்படைக்கப்பட்டது. தோழர் றேகனை படுகொலை செய்ததன் மக்களின் உணர்வை திசைதிருப்பி அரசியல் லாபம் தேடும் நோக்கில் சிலர் தூண்டப்பட்டனர். இதனால் மனிதநேயமற்ற முறையில் தமது சமூக முரண்பாட்டை வெளிப்படுத்தி பொது மக்களில் சிலர் நடந்து கொண்டனர். இச்சூழ்நிலைக்குரிய முறையில் குற்றவாளிகளை மீட்டுக்கொண்டனர்.

## பொலிஸ்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

வந்துவிடப்பட்டார்.

கடத்தியவர்கள் தம்மை நல்லபடியாகக் கவனித்ததாக தெரிவித்துள்ளார். (ஐ)

## தனியார்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தனியார் வாகனங்கள் ஆயுதப்படையினரால் பாவிக்கப்படுவது குறித்து மதவாச்சி எம். பி. திரு. மைத்திரிபால சேனநாயக்கா பிரஸ்தாபித்த போதே, அமைச்சர் லலித் அத்துலத்முதலி மேற்கண்டவாறு விளக்கம் கூறினார். (ப-உ)


## மின்தறி நெசவாளர்கள்

(பெண்கள்)

யாழ்ப்பாணத்தில் எதுவித தடங்கலுமின்றி இயங்கிக் கொண்டிருக்கும் மின் நெசவாலைக்கு 2 வருடங்களுக்கு மேல் அனுபவம் பெற்ற பெண் நெசவாளர்கள் உடன் தேவை.

விசேடசம்பளத்துடன் தங்கும் இடவசதிகளும் உண்டு.

விளம்பர இல: 2028,

மே/பா, ஈழநாடு – யாழ்ப்பாணம்.

(2028)

## யா / வைத்தீஸ்வர வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

### ஆண்டு 7 (1986) பிரவேசப் பரீட்சை

பரீட்சைத் திகதி: 21-12-1985 சனிக்கிழமை

விண்ணப்பமுடிவு: 10-12-1985 செவ்வாய்க்கிழமை

இப்பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறும் ஐந்து மாணவர்களுக்கு ஆண்டுதோறும் புலமைப் பரிசில் வழங்கப்படும்.

விண்ணப்ப[illegible]களையும்; புலமைப்பரிசில் விபரங்களையும் வி[illegible] அலுவலகத்தில் பெற்றுக்கொள்க.

அதிபர்.

(2026)

## வீடியோ பிரசாத்

### முக்கிய அறிவித்தல்

எமது ஸ்தாபனம் 27-11-85ல் இருந்து தவிர்க்கமுடியாத காரணங்களினால் தற்காலிகமாக சத்திரச்சந்திக் கருகாமையில் இலக்கம் 232, ஆஸ்பத்திரி வீதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

உரிமையாளர்,

வீடியோ பிரசாத்

## ஊழியர் பற்றுக்குறை

(பண்டத்தரிப்பு)

யாழ். அபிவிருத்திச் சபையின் பண்டத்தரிப்பு பட்டின சபை அலுவலகத்தில் ஊழியர் பற்றுக்குறை நிலவுகின்றது. எழுதுவினைஞர், சிற்றூழியர்கள் ஆகியோருக்கு இந்த அலுவலகத்தில் பற்றுக்குறை இருப்பதாக அறியப்படுகின்றது.

## படையெடுக்கப்.....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தங்கள் வேற்றொரைகப்பட்டன. இதில் இரு தாக்குதல்களை வெற்றிகரமாக முடிந்துவிட்டதாக வெளிவந்த போதும், மற்றைய இரு தாக்குதல்களும் தென்னாபிரிக்கத் துருப்புகள் முறியடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. முன்றாம் தே. ஈ. கெரில்லாக்கள் ஸிம்பாப்வேயிலிருந்து வந்து இத்தாக்குதலை நடத்தியதாகக் கூறப்பட்டது.

இதேவேளை தென்னாபிரிக்காவின் தலைநகரான பிரிட்டோரியாவிலுள்ள வெள்ளையர்களின் வர்த்தக நிலையங்களைப் பகிஷ்கரிக்கும் போராட்டத்தை கறுப்பின மக்கள் ஆரம்பித்துள்ளனர். நேற்று முன்தினம் பிரிட்டோரியாவுக்கு அருகே சுமார் 15 ஆயிரம் கலகக்காரர்களை பொலிசார் விரட்டிய போது 13 பேர் கொல்லப்பட்டதைக் கண்டித்தே இந்த நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம)

**எம்பயர்**

7 அடித் திரையில்
10-30, 2-30, 6-30, 9-15
பாக்யராஜ், கல்பனா
"சின்ன வீடு"

**சரவணபவன்**
**மினி சினிமா**

6 அடி அகலத் திரையில்
10-30, 2-30, 4 45, 7-00
TECHNICIAN
என்றும் கண்டிராத தாக்குதல்கள் நிறைந்த படம்.
வயது வந்தவர்களுக்கு மட்டும்

**உஷா மினி**

10-30, 2-30, 4-45, 6-45
CODE NAME
WILD GEESE
6 கொமாண்டோக்கள் இராணுவ முகாம் மீது மேற்கொள்ளும் நவீன ஆயுத தாக்குதல்.

**வீடியோ சினிமா**

10-30, 2-30, 4-30, 6-30
"SPRING
BREAK"
(Adults only)
கொழும்பில் பலநாள் கள் ஓடியது. யாழ்நகரில் முதல் தடவை காண்பிக் கப்படுகிறது. பாலியல் காட்சிகள் நிறைந்தபடம்

**வெலிங்டன்**

10-30, 2-30, 6-30
ஜெய்சங்கர்—ஜெயசித்திரா
ஆகியோர் நடித்த
காதல், பயங்கர சண்டைக்
காட்சிகள் நிறைந்த
பணக்காரப் பெண்
(புதிய பிரதி)
30-ம் திகதி முதல்
TARZAN THE LORD
OF AP[...]
(New Rel[...]

## சென். பற்றிக்ஸ் கல்லூரியில்:
# மாணவர் விடுதியும், மைதானமும் 5-ம் திகதி திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் புதிதாக கட்டப்பட்ட மாணவர் விடுதியும், புதிய விளையாட்டு மைதானமும், புதிய பார்வையாளர் மண்டபமும் அடுத்த மாதம் 5-ம் திகதி திறந்து வைக்கப்படவிருக்கிறது.

பல லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட மாணவர் விடுதிக்கு "வண. பிதா. பி. ஏ. தோமஸ்" அடிகளாரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இப் புதிய விடுதி யாழ். ஆயர் டாக்டர் பி. தியோகுப்பிள்ளை ஆண்டகையால் பிற்பகல் 3-40 க்கு திறந்து வைக்கப்படும்.

"யாழ். ஆயர் பி. தியோகுப்பிள்ளை" எனப் பெயர் சூட்டப்பட்ட புதிய விளையாட்டு மைதானத்தையும் பார்வையாளர் மண்டபத்தையும் யாழ். அரசாங்க அதிபர் திரு. வி. கே. சிவஞானம் பி. பகல் 4 மணிக்குத் திறந்து வைப்பார்.

இவ்வைபவத்தை அடுத்து புதிய விளையாட்டரங்கு மைதானத்தில் பல விளையாட்டு போட்டிகள் நடைபெறவுள்ளது. குறிப்பாக சென். பற்றிக்ஸ் கல்லூரி ஆசிரியர்கள் கோஷ்டிக்கும் - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர்கள் கோஷ்டிக்குமிடையில் சிநேகபூர்வமான உதைப்பந்தாட்டப் போட்டி நடைபெறும். இப் போட்டிக்கு யாழ். அரசாங்க அதிபர் திரு. வி. கே. சிவஞானம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். (ட)

## நல்ல இன தென்னங்கன்று விநியோகம்

(பண்டத்தரிப்பு)

மாதம் முப்பது காய்கள் காய்க்கக்கூடிய நல்ல இன செவ்விளநீர்த் தென்னங்கன்றுகளை பொதுமக்களுக்குச் சாவகச்சேரியில் நாற்றுமேடையிலிருந்து விநியோகிக்கப்படவிருப்பதாக பண்டத்தரிப்பு விவசாய விரிவாக்க அலுவலர் திரு. வை. பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இச் செவ்விளநீர்த் தென்னங்கன்றுகளைப் பெறவிரும்பும் இப்பகுதிப் பொதுமக்கள் தம்மிடம் தொடர்பு கொண்டு தமது பெயரைப் பதிவுசெய்து கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## தெரிவுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை சென். மேரிஸ் சனசமூக நிலையத்தின் வருடாந்த நிர்வாகிகள் தெரிவுக் கூட்டம் டிசம்பர் மாதம் முதலாம் திகதி ஞாயிறு காலை பங்குத் தந்தை வணபிதா பி. எம். இம்மானுவல் தலைமையில் சென். மேரிஸ் இளைஞர் சபையின் மேற்பார்வையில் நடைபெறவுள்ளது.

## ஊழியர்களுக்கு நிவாரண உதவி

(சுண்டுக்குளி)

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட யாழ். அரச அதிபரின் நிர்வாகத்துக்குட்பட்ட ஊழியர்களுக்கு வெள்ள நிவாரண முற்பணமாக தலா 500 ரூபா வழங்கப்படுகின்றது.

இந்த 500 ரூபா முற்பணம் ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து மாதம் 50 ரூபா வீதம் 10 மாதங்களில் கழித்து அறவிடப்படும்.

## நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை சென். மேரிஸ் பங்குமக்களின் நன்மை கருதி அவர்களின் பிணக்குகளைத் தீர்த்துவைக்கும் நோக்கமாக ஓர் இணக்கசபை தெரிவு செய்யப்பட்டுள்ளது. தலைவர் செ. செல்வக்குமார் உபதலைவர் தி. ஞ. அந்தோனிப்பிள்ளை. செயலாளர் செ. சட்வேட். உபசெயலாளர் ய. அடைக்கலம், பொருளாளர் ஞ. மரியதாஸ்.

இவர்களுடன் 18 பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

சுன்னாகம்
பல நோ. கூ. சங்கம்
(வரையறுக்கப்பட்டது)
சுன்னாகம்.

**பகிரங்க ஏல விற்பனை**

கீழ்காணும் பாவித்த பொருட்கள் சுன்னாகம் பல நோ. கூ. சங்க தலைமை அலுவலகத்தில் வைத்து 30-11-85 சனிக்கிழமை மு. பகல் 10-00 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவிருக்கின்றன. வேண்டியவர்கள் பொருட்களைப் பார்வையிடலாம்.

பொருட்களின் விபரம்:

1. எவர் சில்வர் பைப் 2" — 23
2. இந்தியன் மோட்டர் துருசு — 01
3. பெற்றோமக்ஸ் — 05
4. கல்லை — 02
5. மேசை மின் விசிறி — 01
6. மண்ணெய் அடுப்பு — 03

இன்னும் பல

பொதுமுகாமையாளர்
சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்,
21-11-85. (1925)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

**THANKS & ACKNOWLEDGEMENT**

SUGUNAN and SIVAGINI together with their parents and relations extend their sincere thanks to all relations and friends who attended the wedding on 13-11-85 and the reception on 16-11-85 sent congratulatory messages, made presentations and helped in many other ways.

| | |
|---|---|
| MR. AND MRS. | MR. AND MRS. |
| K. MANIKKAVASAGAR, | V. KARTHIGESU |
| Dutch Road, | "Senthil", |
| Alaveddy. | Alaveddy North. |

(2021)

## "வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு ஆங்கிலம் அவசியம்"

(மானிப்பாய்)

"நம்மவர்கள் ஆங்கிலக் கல்வியை நன்கு கற்றதனாலேயே வெளிநாடுகளில் தரமான வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. வரும் காலத்தில் இங்கு அதிக வேலைவாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளமுடியாத ஒருநிலை ஏற்பட்டு வருகிறது. இதனை உணர்ந்து சர்வதேசமொழியான ஆங்கிலத்தை வரும் காலப் பிரஜைகளான மாணவர்கள் சிறப்பாகக் கற்றுக் கொள்ளவேண்டும்.."

இவ்வாறு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற யாழ். மாவட்ட ஆங்கிலப் போட்டி தொடர்பான வைபவத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய முன்னாள் ஆங்கில வட்டாரக் கல்வி அதிகாரி திருமதி எம். ஏ. வாணர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்:- மாணவர்கள் ஆங்கிலத்தைத் திறம்படக் கற்க அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகிய அனைவரும் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

யாழ். இந்து மகளிர் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் இரு நாட்கள் நடைபெற்ற இப்போட்டிகளில் நூற்றுக்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் பங்குபற்றினார்கள்.

முதல்நாள் நிகழ்ச்சிகளின் ஆரம்பத்தில் யாழ். மாவட்டக் கல்வி அதிகாரி திரு. வ. தம்பிராசா தமது தலைமையுரையில் தாய்மொழியுடன் சர்வதேச மொழியான ஆங்கிலத்தை ஒவ்வொரு மாணவர்களும் கற்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

சொல்லாளரும், போட்டி அமைப்பாளரும், ஆங்கில போதனாவட்டாரக் கல்வி அதிகாரியுமான திரு. இ. குலசேகரனும் உரை நிகழ்த்தினார்.

## "பாடசாலை வளர்ச்சியில் பெற்றோரின் பங்கு அவசியம்"

(யாழ்ப்பாணம்)

ஒரு பாடசாலையின் துரித வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் பெற்றோரின் ஒத்துழைப்பும் பங்களிப்பும் இன்றியமையாததாகும். பெற்றோர்கள் மட்டுமன்றி பாடசாலையின் பழைய மாணவர்களும் பாடசாலையின் கல்வி முன்னேற்றத்திற்குத் தம்மாலியன்ற பங்களிப்புக்களை வழங்கவேண்டும்.

இவ்வாறு யாழ். புனித சாள்ஸ் மகாவித்தியாலய அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் தலைமை வகித்து உரையாற்றிய பாடசாலை அதிபர் திரு. எம். மரிசலீன் குறிப்பிட்டார்.

வித்தியாலய உப அதிபர் திரு. அல்போன்சஸ் பேசுகையில் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெற்றோர் அதிக கவனம் செலுத்தவேண்டும். பிள்ளைகள் கல்வி கற்பதற்குப் பெற்றோர் உரிய சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

நிர்வாக சபைத் தெரிவொன்றும் இடம்பெற்றது. தலைவர்:- திரு. கே. எம். மரிசலீன், உப தலைவர்கள்:- திரு. எம். ராஜன், திருமதி ஞா. அன்னம்மா, செயலாளர் திரு. மோ. நாசிமியஸ், உப செயலாளர்: திரு. ஜோ. யேசுதாசன், பொருளாளர்:- திரு பி. ஜோசப்பிள்ளை: 11 பேர் கொண்ட செயற்குழுவொன்றும் தெரிவாகியது. (ப)

**விசேட அறிவித்தல்**

G. A. Q. (87-ம் ஆண்டு)
புதிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
G. A. Q (86-ம் ஆண்டு)
மீட்டல் வகுப்புகளும் நடைபெறுகின்றன.
(5 மாதத்தில் முழுப்பாடத்திட்டமும் முடித்துக்கொடுக்கப்படும்)

B. A. புதிய வகுப்புக்களுக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

ஆசிரியர்கள்

| | |
|---|---|
| பொருளியல் | — குமாரவேல், வரதராஜன் |
| தமிழ் | — குழந்தை |
| புவியியல் | — குணராஜா |
| இந்துநாகரிகம் | — அருள்நங்கை |
| மெய்யியல் | — வேல் சிவானந்தன் |
| அரசியல் | — பிரபல ஆசிரியர் |

குறிப்பு: G. C. E (A/L) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களும் மேற் குறிப்பிட்ட பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.

வெளிநிலைப் பரீட்சைக்கான பதிவுகள், அனுமதிகள் என்பன யாவுமே எமது நிறுவனத்தினால் செய்து கொடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு: J. E C.
யாழ்ப்பாணக் கல்வி நிலையம்,
பட்டப்படிப்புக்கள் பகுதி (மேல் மாடி),
சாந்தி சினிமா முன்பாக
(ராஜையா செட்டியார் ஒழுங்கை)
யாழ்ப்பாணம் (2022)

